இனிமையான குழந்தைகளே! வைரம் போன்ற வாழ்க்கையை உருவாக்குவதற்காக தந்தையை மிகவும் குஷி, குஷியாக நினைவு செய்யுங்கள், அப்பொழுது துரு நீங்கிவிடும்.

கேள்வி: மாலையின் மணியாக யார் ஆகுவார்கள், அதற்கான முயற்சி என்ன?

பதில்: யாருக்கு இறுதியில் எதுவுமே நினைவு வராதோ அவர்களே மாலையின் மணி ஆகுவார்கள். எந்தக் குழந்தைகள் கர்மாதீத நிலையை அடைவார்களோ அவர்களே மாலையின் மணி ஆகுவார்கள். சிலர் மிகுந்த செல்வந்தர்களாக உள்ளனர், அனேக தொழிற்சாலைகள் போன்றவை உள்ளன எனில் அவை அனைத்தையும் மறந்துபோக வேண்டும். யார் மீதும் பற்று இருக்கக் கூடாது. எனது, எனது என்பது இருக்கக் கூடாது. இவர் எனது சகோதரர் (ஆத்மா) ஆவார், இந்த ஆன்மிக சம்பந்தம் உள்ளது, வேறு எந்த சம்பந்தமும் கிடையாது. அத்தகைய ஆன்மிக சம்பந்தம் வைக்கக்கூடிய, அனைத்தையும் மறந்துபோகக் கூடிய குழந்தைகள் தான் மாலையில் வர முடியும்.

ஓம்சாந்தி. ஆன்மிகத் தந்தை ஆன்மிகக் குழந்தைகளுக்குப் புரியவைக்கின்றார். நாம் ஆத்மாக் கள் மற்றும் பரமாத்ம தந்தையின் குழந்தைகள், எனவே, அனைவரும் சகோதரர்கள் ஆவோம் என்ற இந்த நம்பிக்கை அவசியம் உறுதியாகி (பக்காவாகி) இருக்கும். பதீதபாவனர் தந்தை யாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று சகோதரர்களுக்குத் தந்தை டைரக்ஷன் (வழி காட்டுதல்) கொடுத்திருக்கின்றார். நினைவு செய்கிறீர்களா அல்லது புத்தியின் யோகம் (நினைவு) வேறு எங்காவது அலைகிறதா? மாயை அவசியம் அலையவைக்கும். நீங்கள் விரும்பாமலேயே கூட உங்களுடைய புத்தி இங்கே அங்கே அலைந்துகொண்டே இருக்கும். பாபா நமக்கு சிருஷ்டிச் சக்கரத்தைப் பற்றிய ஞானம் கொடுத்திருக்கின்றார், 84 பிறவிகளின் கதையைக் கற்பித்திருக்கின்றார் என்பது குழந்தைகளின் புத்தியில் இருக்க வேண்டும். இந்த 84 பிறவிகளின் சக்கரம் முடிவடைந்துவிட்டது. நாம் மீண்டும் வீட்டிற்குச் செல்கின்றோம், அனேக முறை நாம் நினைவு யாத்திரையின் மூலம் தூய்மையாகி வீட்டிற்குச் சென்றிருக்கின்றோம். நாம் அனைவரும் சகோதர சகோதரர்கள், இதில் உடல் சார்ந்த எந்த விசயமும் கிடையாது என்பது உங்களது புத்தியில் வருகிறது. நீங்கள் உடலை நினைவு செய்யாதீர்கள். நாம் ஆத்மாக்கள், நாம் தான் பாவனமாக, சதோபிரதானமாக இருந்தோம், இப்பொழுது பதீதம் ஆகிவிட்டோம். எனவே, வைரம் போன்ற வாழ்க்கையை உருவாக்கக் கூடிய பாபாவை குஷியோடு நினைவு செய்ய வேண்டும், இதன் மூலம் துரு நீங்கிவிடும். குழந்தைகளே! முதன்முதலில் தன்னை ஆத்மா எனப் புரிந்துகொள்ளுங்கள், இது கூட ஞானம் ஆகும். பிறகு, தந்தையை நினைவு செய்யுங்கள், இது விஞ்ஞானம் ஆகும் என்று தந்தை புரியவைக் கின்றார். ஏனெனில், ஆத்மா ஞானத்தைக் கடந்து விஞ்ஞானத்திற்கு, அமைதியான வீட்டிற்குச் செல்ல வேண்டும். ஆத்மாவின் சுயதர்மமும் சாந்தி மற்றும் வீடும் சாந்தமான வீடாகும். எனவே, முதலில் நாம் அங்கே சென்றடைய வேண்டும். பாபா கூட அங்கே இருந்து தான் வந்திருக்கின்றார். ஆனால், மனிதர்களுக்கு

இந்த அனைத்து விசயங்களும் தெரியாது.

இந்த பரலௌகீக தந்தை எதிரில் அமர்ந்துகொண்டு புரியவைக்கின்றார். குழந்தைகளே! நான் பரந்தாமத்திலிருந்து குழந்தைகளாகிய உங்களிடம் நாடகத் திட்டத்தின் அனுசாரமாக வந்திருக்கின்றேன். ஏன் வந்திருக்கின்றேன்? உங்களை திரும்ப அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றேன். இப்பொழுது நீங்கள் பதீதமான விகாரி ஆகிவிட்டீர்கள். ஜென்ம ஜென்மங்களாக விகாரத்தின் மூலம் தான் பிறப்பெடுத்திருக்கிறீர்கள். ஆகவே, பிரஷ்டாச்சாரி (கீழானநிலை) என்று கூறப்படுகிறது. நாம் பிரஷ்டாச்சாரியிலிருந்து சிரேஷ்டாச்சாரியாக (உயர்ந்தநிலை) எவ்வாறு ஆகுவது என்பதை தந்தை புரியவைக்கின்றார். குழந்தைகளே! என்னை நினைவு செய்தீர்கள் என்றால் தூய்மையான சிரேஷ்டாச்சாரி ஆகிவிடுவீர்கள். இந்த நினைவில் இருந்துகொண்டு நீங்கள் அனைத்தும் செய்ய முடியும். தொழில் செய்ய முடியாது என்பது கிடையாது.

பாபா மாலையின் மணியாக யார் ஆகுவார்கள்? என்று தந்தையிடம் குழந்தைகள் கேட்கின்றனர். குழந்தைகளே! யார் கர்மாதீத நிலையை அடைவார்களோ, யாருக்கு இறுதியில் எதுவுமே நினைவு வராதோ, அவர்களே மாலையின் மணி ஆகுவார்கள். சிலர் பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றனர், அனேக தொழிற் சாலைகள் போன்றவை உள்ளன எனில் இவை அனைத்தையும் மறந்துபோக வேண்டியதிருக்கும். உங்களிடமோ எதுவுமே இல்லை. நாம் தந்தையினுடைய குழந்தைகள் ஆவோம், சகோதரர்கள் ஆவோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நமக்கு எதன் மீதும் பற்றுதல் கிடையாது. எனது, எனது என்பது இல்லை அல்லவா! இவர் எனது சகோதரர் ஆவார், இந்த சம்பந்தம் மட்டுமே உள்ளது, வேறு எந்த சம்பந்தமும் கிடையாது. இதை ஆன்மிக சம்பந்தம் என்று கூறப்படுகிறது. இத்தனை வயது வரை தேகத்தின் நினைவு தான் வந்தது, ஆத்மாவின் நினைவே எவருக்கும் வரவில்லை. இது கூட நாடகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த விசயங்களை தந்தை புரியவைக் கின்றார் மற்றும் பாவனம் ஆகுவதற்காக முயற்சி செய்விக்கின்றார். 8 மணி நேரம் மட்டும் என்னை நினைவு செய்யுங்கள் என்று பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு நேரம் கொடுக் கின்றார். அது எல்லைக்குட்பட்ட சேவை, இது முழு உலகத்தின் சேவை ஆகும். அவசியம் உண்பீர்கள், குடிப்பீர்கள், தூங்குவீர்கள், சுற்றுவீர்கள் முழு நாளும் நினைவே செய்ய முடியாது. இப்பொழுது நீங்கள் எல்லை யற்ற சேவை செய்கிறீர்கள். எவ்வாறு தந்தை விசார் சாகர் மந்தன் (ஞானக் கடலை கடைகின்றாரோ) செய்கின்றாரோ, அவ்வாறே குழந்தைகளாகிய உங்களுக்கும் கூட கடைவதற்குக் கற்பிக்கின்றார், செய்பவர் செய்விப்பவர் ஆவார் அல்லவா! எனவே, உங்களுக்கு செய்து கற்பிக்கின்றார். முயற்சி செய்யச் செய்ய உங்களுடைய வெற்றி மாலை உருவாகிவிடும். சத்யுக, திரேதாயுகத்தில் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்கள் வெற்றி யாளர்களாக இருக்கிறார்கள். பிறகு, அனைத்து நடிகர்களும் இந்த நாடகத்தில் நடிப்பு நடிப்பதற் காக வரிசைக்கிரமமாக வருகிறார்கள். அனைவரும் சேர்ந்து வரமாட்டார்கள். நடிகர் களாகிய உங்கள் அனைவருடைய இருப்பிடம் பிரம்மலோகம் ஆகும். அங்கிருந்து இங்கே வந்து சரீரம் எடுக்கிறீர்கள். இந்த அனைத்து விசயங்களும் மிகவும் எளிதானவை. இவை குழந்தைகளாகிய உங்களுக்கு மட்டும் தான் நினைவு இருக்கிறது. உங்களுடைய வீடு இனிமையான வீடு, அமைதியான வீடு ஆகும். வேறு எவரும்

தன்னுடைய வீட்டை அறிந்திருக்கவில்லை. அவர்கள் நாம் ஐக்கியமாகிவிடுவோம் என்று கூறிவிடுகிறார்கள். எவ்வாறு கடலிலிருந்து நீர்க்குமிழி தோன்றி அதிலேயே அடங்கிவிடுகிறதோ, அவ்வாறு நாம் கூட இந்த பிரம்மத்தில் கலந்துவிடு கிறோம் பிறகு, எங்கே பார்த்தாலும் அங்கே பிரம்மமே பிரம்மாக இருக்கிறது என்று கூறுகின்றனர். அவர்கள் பிரம்மத்தைத் தான் ஈஸ்வரன் என்று நினைக்கின்றனர். ஆகவே, உங்களுடைய விசயங்கள் அவர்களுடைய புத்தியில் பதிவதில்லை. நீங்கள் அவர்களை (உங்கள் கருத்துக்கு) எதிரானவர்கள் என்று புரிந்துகொள்வீர்கள், அவர்கள் உங்களை (அவர்கள் கருத்துக்கு) எதிரானவர்கள் என்று புரிந்துகொள்வார்கள். ஏனெனில், அவர்களுடைய தர்மமே வேறு. ஆனால், அனைத்து ஆத்மாக்களும் சாந்திதாமத்திற்கு அவசியம் செல்வார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். மற்றபடி, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அதனதன் நடிப்பு கிடைத்திருக்கின்றது. இதைத் தான் அதிசயம் என்று கூறுகிறார்கள். குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு ஆழத்தில் செல்கிறீர்கள். ஆத்மா எவ்வளவு சிறியதாக உள்ளது? எவ்வாறு நடிப்பு நடிக்கிறது? இந்த ஞானம் எவ்வாறு தந்தையிடம் உள்ளதோ, எவ்வாறு அவர் ஞானக்கடலாக இருக்கின்றாரோ, அவ்வாறே, குழந்தைகளாகிய உங்களிடமும் உள்ளது, நீங்கள் இப்பொழுது அத்தகைய ஞானவான் ஆகுகிறீர்கள். அவர்கள் பக்திமான்கள் ஆவர், நீங்கள் ஞானவான் ஆவீர்கள். பக்திமான் என்றால் இரவில் இருக்கக்கூடியவர்கள் மற்றும் ஞானவான் என்றால் பகலில் இருக்கக்கூடியவர்கள். அரைக்கல்பம் நீங்கள் சுகதாமத்தில் இருக்கிறீர்கள், அரைக் கல்பம் துக்கதாமத்தில் இருக்கிறீர்கள். இதையே தொலைநோக்குப் பார்வை என்று கூறப்படு கிறது. உங்களுடைய புத்தி இப்பொழுது வெகு தூரம் வரை செல்கிறது - நாம் ஆத்மா இனிமையான வீடு, பிரம்மாண்டத்தில் இருக்கக் கூடியவர்கள். தந்தை இந்த மனித சிருஷ்டியின் விதை ரூபமாக இருக்கின்றார். எனவே, அவர் ஞானக்கடல் ஆவார், அவரிடம் மரத்தைப் பற்றிய ஞானம் உள்ளது. நீங்கள் இப்பொழுது சரீர உணர்வை நீக்குவதற்காக தன்னை ஆத்மா எனப் புரிந்துகொண்டு இருக்கிறீர்கள். வேறு எந்தப் பொருளும் நினைவு வரக்கூடாது. முழுமையாக ஆத்மஅபிமானி ஆகிவிடவேண்டும். நான் ஆத்மா, நான் ஆத்மா, ஆத்மாவிற்கு நினைவு வரும்படியாக என்னிடம் எதுவுமே இல்லை. இறுதி காலத்தில் யார் எதை நினைக்கிறார்களோ என்று பாடப்படுகின்றது. எனவே, ஒருவேளை, ஏதாவது ஒரு பொருள் இருந்ததென்றால் அவசியம் அது நினைவு வரும். இது சிந்தனை செய்வதற்கான விசயம் ஆகும். ஒருவேளை, ஏதாவது இருக்கிறது, யாராவது உற்றார், உறவினர் போன்றோர் இருக்கின்றனர் என்றால் அவசியம் நினைவு வரும். நீங்களோ தன்னுடைய அனைத்தையும் சிவபாபாவிடம் கொடுத்து விட்டீர்கள். பிறகு, இது என்னுடைய பொருள் என்று நினைக்கக் கூடாது. எப்பொழுது பாபாவிற்குக் கொடுத்துவிட்டீர்களோ, பிறகு, ஏன் நினைவு வருகிறது? நீங்கள் மறந்துவிடுங்கள். ஒருவேளை, அது நினைவு வந்துகொண்டே இருந்தால், அது கூட கடைசியில் நஷ்டத்தை விளைவித்துவிடும். இப்பொழுது உங்களுக்கு இந்த அனைத்து புதுப்புது விசயங்கள் கிடைக் கின்றன. பழைய எந்த ஒரு பொருளும் உங்களிடம் இல்லை. எவ்வாறு பழைய பொருட்கள் அனைத்தையும் வெட்டியானுக்குக் கொடுத்துவிடுகின்றனர் அல்லவா ! அவ்வாறே நீங்கள் கூட தன்னுடைய அனைத்தையும் கொடுத்துவிடுகிறீர்கள், பிறகு, நினைவு வரக்கூடாது. நான் சகோதரன் (ஆத்மா) ஆவேன், பாபாவின் குழந்தையாவேன், என்னிடம் எதுவுமே

இல்லை என்பது மட்டும் நினைவு இருக்க வேண்டும். சரீரம் கூட இல்லை. பிறகு, புது உலகத்தில் அனைத்தும் புதிய பொருட்களாகக் கிடைக்கும். அங்கேயோ வைர, வைடூரியங்களாலான மாளிகைகளில் வசிப்பீர்கள். அது எதிர்காலத்தின் விசயமாகிவிட்டது. குழந்தைகளே! நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள்? என்று பாபா கேட்கின்றார் என்றால், பாபா நாங்கள் நாராயணர் ஆகப்போகிறோம் என்று குழந்தைகள் கூறுகின்றனர். இது குஷிக்கான விசயம் ஆகிவிட்டது அல்லவா ! ஆனால், எப்பொழுது எந்த ஒரு பழைய பொருளும் நினைவு வராதோ, அப்பொழுதே மாலையின் மணி ஆகுவீர்கள். 108 மணி மாலையின் மணிகள் இராஜ்யம் செய்திருக்கின்றனர். கோவில்களில் பிறகு 16108 மணிகளின் மாலை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிகமானோர் மாலையின் மணி ஆகுவார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் வருவார்களோ, அவ்வளவு சுகத்தை அடைவார்கள். யார் பின்னால் வருகிறார்களோ, அவர்கள் அந்தளவிற்கு சுகத்தை அடைய வில்லை. அவர்களுக்கு கொஞ்ச சமயம் சுகம் கிடைக்கிறது, துக்கமும் கூட குறைவாகவே அடைவார்கள்.

கடைசியில் எதுவுமே நினைவு வரக்கூடாது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் நினைவில் வைத்திடுங்கள் என்று பாபா கூறுகின்றார். எது அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறதோ, அது கூட நினைவு வரக்கூடாது. நான் மீதம் இருக்கும்படியாக எந்தப் பொருளையும் வாங்குவதில்லை. ஏனெனில், அதற்கு அங்கே நான் நிறைத்துக் கொடுக்க வேண்டியதாக இருக்கும், ஏனென்றால் நான் ஏழைப் பங்காளனாக இருக்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். சிலர் கொடுத்துவிட்டு, பிறகு ஏதாவது ஒரு காரணத்தினால் எப்பொழுது ஓடிவிடுகிறார்களோ, அப்பொழுது (கொடுத்ததை) கேட்கத் துவங்கிவிடுகின்றனர். மாயை அவர்களை ஒரேயடியாகத் தீண்டி விடுகிறது (கொட்டி விடுகிறது). இல்லையென்றால், நீங்கள் அடித்தாலும் சரி, அன்பு காட்டினாலும் சரி, இந்த மஸ்தானா (போதையில் இருப்பவர்) உங்களுடைய வாசலைவிட்டு ஒருபொழுதும் போகமாட்டேன், ஒருபொழுதும் மறக்க மாட்டேன் என்று கூறுவார்கள். குழந்தைகளாகிய நீங்கள் நரனிலிருந்து நாராயணர் ஆகுவதற்காக வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எவ்வளவு பெரிய ஆஸ்தி கிடைக்கிறது! பிறகு, நாம் கொடுக்கிறோம் என்று ஏன் கூறுகிறீர்கள்? நீங்கள் பெறுகிறீர்கள் அல்லவா! நீங்கள் ஏதாவது கொடுங்கள் என்று யார் கூறுகிறார்கள்? மற்றபடி, யாராவது ஒரு பைசா கொடுத்தார்கள் என்றால் கூட அங்கே அவர்களுக்கு மாளிகை உருவாகிவிடும். எவ்வாறு சுதாமா ஒரு பிடி அவல் கொடுத்தார் அல்லவா ! எனவே, குழந்தைகள் சுதாமா போல் பருப்பு, அரிசி எடுத்து வருகிறார்கள். நமக்கு மாளிகை கிடைத்துவிடும் என்று நினைக்கிறார்கள். அத்தகைய குழந்தைகளைப் பார்த்து ஆஹா! இவர்களுக்கு புது உலகத்தில் மாளிகை உருவாகப்போகிறது என்று தந்தை மிகுந்த குஷி அடைகின்றார். ஏனெனில், மிகுந்த அன்பு மற்றும் நல்ல பாவனையோடு எடுத்து வருகிறார்கள். அத்தகைய குழந்தைகளின் ஓஹோ பாக்கியம் உருவாகிறது, அவர்கள் மிக உயர்ந்த பதவியை அடைவார்கள்.

இப்பொழுது நாடகத் திட்டத்தின் அனுசாரமாக, பாபா மற்றும் குழந்தைகளாகிய உங்களுடைய அடி அடியும், கல்ப கல்பமாக நடந்தது போலவே நடக்கிறது. உங்களுடைய அடி, அடியிலும் பல கோடிகள் உள்ளன. தேவதைகளுடைய

பாதங்களில் தாமரை மலர் காண்பிக்கின்றனர் எனில், இதற்குக் கூட ஏதாவது அர்த்தம் இருக்கும் அல்லவா! இப்பொழுது உங்களுக்கு பல கோடி மடங்கு வருமானம் கிடைத்துக்கொண்டே இருக்கிறது. நீங்கள் பாபாவிடம் பல கோடி மடங்கு செல்வந்தர் (பத்மாபதம்பதி) ஆகுவதற்காக வருகிறீர்கள். எனில், நீங்கள் அவ்வளவு மகான், மகான், மகான் பாக்கியசாலிகள் ஆவீர்கள். ஆனால், அதிலும் கூட பிறகு வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரமாகவே உள்ளனர். உங்களுடைய முயற்சி கல்ப கல்பமாக அதே நாடகத் திட்டத்தின் அனுசாரமாக நடைபெறுகிறது. நாடகம் உங்களை முயற்சி செய்வித்துக்கொண்டு இருக்கிறது. ஈஸ்வரன் கூட நாடகத்தின் அனுசாரமாக உங்களுக்கு வழி கொடுக்கின்றார். எனில், நாடகத்திற்கு வசமாகி இருக்கின்றார் அல்லவா! பிறகு, இந்த நாடகம் யாருடைய வசத்தில் (கட்டுப்பாட்டில்) உள்ளது? குழந்தைகளே! நாடகம் அனாதியில் உருவாக்கப்பட்டு இருக் கிறது. நாடகம் எப்பொழுது உருவானது என்பதை எவரும் கூற முடியாது. இது நடந்துகொண்டே இருக்கிறது. நாடகத்தில் ஈஸ்வரனுடைய வழி நம்பர்ஒன் வழியாகக் கிடைக் கின்றது. ஆகவே, ஈஸ்வரிய வழி என்று அதைக் கூறப்படுகின்றது. அவ்வழி உங்களை தேவதை ஆக்குகிறது மற்றும் மனிதருடைய வழி சீ, சீ ஆக்குகிறது. ஈஸ்வரிய வழியின் மூலம் நீங்கள் மனிதனிலிருந்து தேவதை ஆகிறீர்கள். பிறகு, 21 பிறவிகளுக்குப் பின்னர் மனித வழிப்படி நடந்து மனிதன் ஆகிவிடுகிறீர்கள். இப்பொழுது உலகம் மாற்றமடையக் கூடிய சங்கமயுகம் ஆகும், இதுவே கீதையின் சம்பவம் (எபிஸோட்) ஆகும். எனவே, இது குழந்தைகளுடைய புத்தியில் இருக்க வேண்டும். மேலும், குழந்தைகள் மிக, மிக இனிமையானவர் ஆக வேண்டும். அன்போடு நடந்துகொள்ள வேண்டும். எந்தக் குழந்தைகள் சாந்தியாக மற்றும் இனிமையாக இருக் கிறார்களோ, அவர்களுடைய பதவி கூட உயர்ந்ததாக இருக்கும். இப்பொழுது உங்களுக்கு ஈஸ்வரிய புத்தி கிடைத்திருக்கிறது. நாம் எல்லையற்ற பாபாவினுடைய குழந்தைகள் ஆகியிருக்கிறோம், பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைந்துகொண்டு இருக்கிறோம் என்று நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். ஆகவே, அளவிடமுடியாத குஷி இருக்க வேண்டும். குழந்தைகளே! சொர்க்கத்தில் இருப்பதை விட இங்கே உங்களுடைய பதவி மிக மிக உயர்ந்தது ஆகும் என்று தந்தை கூறுகின்றார். தந்தை உங்களுக்கு மட்டும் கற்பிக்கின்றார். பகவானுடைய மகா வாக்கியம் - நான் உங்களை இரட்டை கிரீடம் அணிந்தவர்களாக, இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆக்குகின்றேன், எனில், தன்னுடைய அதிர்ஷ்டத்தின் மீது உங்களுக்கு மிகுந்த குஷி இருக்க வேண்டும். ஆஹா! பாபா வந்து என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னவாக ஆக்கியிருக் கின்றார்! கல் போன்ற எனது வாழ்க்கையை வைரம் போன்று ஆக்கிவிடுகின்றார்! நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தை மற்றும் தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:-

1. உயர்ந்த பதவியை அடைவதற்காக மிக, மிக சாந்தமான உள்ளத்துடன் இருக்க வேண்டும், இனிமையானவர் ஆகவேண்டும், அனைவருடனும் அன்போடு நடந்து கொள்ள வேண்டும்.

2. என்னவெல்லாம் பாபாவிற்கு அர்ப்பணம் செய்திருக்கிறீர்களோ, அதை மறந்துவிட வேண்டும், அவற்றின் நினைவு கூட வரக்கூடாது. நான் பாபாவிற்குக் கொடுக்கின்றேன் என்ற இந்த எண்ணம் ஒருபொழுதும் வரக்கூடாது.

வரதானம் : பிராமண வாழ்வில் காமம் என்ற மகா எதிரியின் கூடவே அதனுடைய அனைத்து நண்பர்களுக்கும் விடை கொடுக்கக்கூடிய சம்பூரண பவித்திரமானவர் ஆகுக.

பிராமண வாழ்வில் காமம் என்ற மகா எதிரியை வெல்வதற்காக எவ்வாறு விசே ̂ கவனம் கொடுக் கிறீர்களோ, அவ்வாறே அதனுடைய அனைத்து நண்பர்களுக்கும் விடை கொடுங்கள். சில குழந்தைகள் கோபம் என்ற மகா பூதத்தை விரட்டிவிடுகிறார்கள், ஆனால், கோபத்தின் குழந்தை, குட்டிகள் மீது கொஞ்சம் அன்பு வைத்திருக்கின்றார்கள். எவ்வாறு சிறிய குழந்தைகள் பிடித்தமானவர்களாக இருக்கின்றார்களோ, அதுபோல் இந்த கோபத்தினுடைய சிறிய குழந்தைகள் அவ்வப்போது அன்பானவர்களாக ஆகிவிடுகின்றார்கள். ஆனால், எப்பொழுது எந்த வொரு விகாரத்தின் அம்சம் கூட இல்லையோ, அப்பொழுதே சம்பூரண பவித்திர மானவர்கள் என்று சொல்ல முடியும். அத்தகைய உறுதியான விரதம் எடுத்துக்கொள்ளுங்கள், அப்பொழுதே உண்மையான பிராமணன் என்று சொல்ல முடியும்.

சுலோகன்: சங்கமயுகத்தின் போதையை அனுபவம் செய்ய வேண்டும் என்றால், மாயையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையுங்கள்.